# Monthly Quiz File – June 2025

1. Choose the incorrect statement regarding Dugong

   A) They live exclusively in warm coastal waters of the Indian and western Pacific Oceans.

   B) They have the nickname as "farmers of the sea."

   C) It is listed as Vulnerable on the IUCN Red List

   D) All the statements are correct

   கடற்பசு பற்றிய தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்

   A) அவை இந்திய மற்றும் மேற்கு பசிபிக் பெருங்கடல்களின் வெப்பமான கடலோர நீரில் மட்டுமே வாழ்கின்றன.

   B) அவை "கடலின் விவசாயிகள்" என்ற புனைப் பெயரைக் கொண்டுள்ளன.

   C) இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது

   D) அனைத்து கூற்றுகளும் சரியானவை

2. The Neyveli Lignite Corporation India Limited was incorporated in

   A) 1946

   B) 1956

   C) 1976

   D) 1986

   இந்திய நெய்வேலி பழுப்பு நிலக்கரி உற்பத்திக் கழகம் எப்போது கூட்டிணைவாக்கப் பட்டது?

   A) 1946

   B) 1956

   C) 1976

   D) 1986

3. The 'Alaigal' project, launched by the Tamil Nadu CM, aims to provide micro-loans to which group for their economic upliftment?

   A) Fisherwomen groups

   B) Farmers

   C) Women Handicraft artisans

   D) Small women led business

தமிழ்நாடு முதல்வரால் தொடங்கப்பட்ட 'அலைகள்' திட்டம் ஆனது, பின்வரும் எந்தக் குழுவினருக்கு அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக வேண்டி நுண் கடன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது?

A) மீனவ மகளிர் குழுக்கள்

B) விவசாயிகள்

C) மகளிர் கைவினைஞர்கள்

D) மகளிர் தலைமையிலான சிறு வணிகம்

4. Dayton Peace Accords is related to

A) Saudi-Yemeni War

B) Bosnian War

C) Boers war

D) Ethiopian Wars

டேட்டன் அமைதி ஒப்பந்தங்கள் எதனுடன் தொடர்புடையது?

A) சவுதி-ஏமன் போர்

B) போஸ்னியப் போர்

C) போயர்கள் போர்

D) எத்தியோப்பியன் போர்கள்

5. The Department of Posts launched 'Know Your DIGIPIN' and 'Know Your PIN Code' platforms. What is DIGIPIN?

A) A New Credit System

B) A Digital Payment Gateway

C) A Digital Address System

D) A Biometric Identification System

தபால் துறையானது, 'Know Your DIGIPIN' மற்றும் 'Know Your PIN Code' தளங்களைத் தொடங்கியுள்ளது. இதில் DIGIPIN என்றால் என்ன?

A) ஒரு புதிய கடன் வழங்கும் அமைப்பு

B) ஒரு எண்ணிமப் பண வழங்கீட்டுத் தள அமைப்பு

C) ஒரு எண்ணிம முகவரி அமைப்பு

D) ஒரு உயிரளவியல் தகவல் சார் அங்கீகார அமைப்பு

6. The Central Institute of Classical Tamil (CICT) has recently commissioned the translation of Thirukkural into which of the following Dravidian languages?

A) Telugu, Kannada, Malayalam, Tulu

B) Kurukh, Gondi, Malto, Brahui

C) Konkani, Kodava, Toda, Kota

D) Irula, Soliga, Koraga, Yerukala

மத்திய செம்மொழித் தமிழ் கல்வி நிறுவனம் (CICT) ஆனது சமீபத்தில் திருக்குறளைப் பின் வரும் எந்த திராவிட மொழிகளில் மொழிபெயர்க்கத் தொடங்கியுள்ளது?

A) தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு

B) குருக், கோண்டி, மால்டோ, பிராகுயி

C) கொங்கனி, கொடவா, தோடா, கோட்டா

D) இருளா, சோலிகா, கொரகா, யெருகலா

7. North Wafra Wara-Burgan field is located between

A) Saudi Arabia and Yemen

B) Saudi Arabia and Oman

C) Saudi Arabia and Kuwait

D) Saudi Arabia and Bahrain

வடக்கு வஃப்ரா வாரா-புர்கான் தளம் எந்தெந்த நாடுகளுக்கு இடையே அமைந்துள்ளது?

A) சவுதி அரேபியா மற்றும் ஏமன்

B) சவுதி அரேபியா மற்றும் ஓமன்

C) சவுதி அரேபியா மற்றும் குவைத்

D) சவுதி அரேபியா மற்றும் பஹ்ரைன்

8. Operation Spider Web was launched by

A) Israel

B) Russia

C) Iran

D) Ukraine

ஸ்பைடர் வெப் நடவடிக்கை எந்த நாட்டினால் நடத்தப்பட்டது?

A) இஸ்ரேல்

B) ரஷ்யா

C) ஈரான்

D) உக்ரைன்

9. Which Union Territory district has become the first in India to meet 100% of its electricity needs with solar energy?

A) Puducherry

B) Lakshadweep

C) Diu

D) Chandigarh

தனது மின்சாரத் தேவையினை மிகவும் முழுமையாக சூரிய சக்தி மூலம் பூர்த்தி செய்த இந்தியாவின் முதல் ஒன்றியப் பிரதேச மாவட்டம் எது?

A) புதுச்சேரி

B) லட்சத்தீவு

C) டையூ

D) சண்டிகர்

10. The ‘Red Teaming’ concept, employed for the first time in an Indian military operation, was used in which operation?

A) Operation Vijay

B) Operation Sindoor

C) Operation Cactus

D) Operation Meghdoot

இந்திய இராணுவ நடவடிக்கையில் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்ட 'Red Teaming' என்ற கருத்தாக்கமானது எந்த நடவடிக்கையில் பயன்படுத்தப் பட்டது?

A) விஜய் நடவடிக்கை

B) சிந்தூர் நடவடிக்கை

C) காக்டஸ் நடவடிக்கை

D) மேக்தூத் நடவடிக்கை

11. Which animal has been declared as the district’s aquatic animal for Kozhikode?

A) Common Otter

B) Indian Pangolin

C) Smooth-coated Otter

D) Pathala Poontharakan

கோழிக்கோடு மாவட்டத்தின் நீர்வாழ் விலங்காக அறிவிக்கப்பட்டுள்ள விலங்கு எது?

A) நீர்நாய்

B) இந்திய எறும்புத் திண்ணி

C) மென்மையான ரோமமுடைய நீர்நாய்

D) பாதாள பூந்தரகன்

12. The initiative "Niveshak Shivir" was launched by

A) IEPFA

B) RBI

C) NSE

D) BSE

"நிவேஷக் ஷிவிர்" என்ற முன்னெடுப்பு எந்த அமைப்பினால் தொடங்கப்பட்டது?

A) IEPFA

B) RBI

C) NSE

D) BSE

13. Viksit Krishi Sankalp Abhiyan, a nationwide campaign, is conducted once in

A) Annually

B) Biannually

C) Quarterly

D) Tri annually

விக்சித் கிருஷி சங்கல்ப் அபியான் எனப்படும் நாடு தழுவியப் பிரச்சாரம் எவ்வளவு கால இடைவெளியில் நடத்தப்படுகிறது?

A) ஆண்டிற்கு ஒரு முறை

B) ஆண்டிற்கு இரண்டு முறை

C) காலாண்டு அடிப்படையில்

D) ஆண்டிற்கு மூன்று முறை

14. The world-first CRISPR therapy for a rare condition was successfully administered to a baby named KJ Muldoon. What rare disease was he treated for?

A) Cystic Fibrosis

B) Sickle Cell Anaemia

C) CPS1 deficiency

D) Muscular Dystrophy

அரிதான நோய் பாதிப்பிற்கான உலகின் முதல் CRISPR சிகிச்சையானது KJ முல்தூன் என்ற குழந்தைக்கு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. அவர் எந்த வகை அரிய நோயினால் பாதிக்கப் பட்டிருந்தார்?

A) நீர்மத் திசுவளர்ச்சி

B) அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை

C) CPS1 குறைபாடு

D) தசைநார் சிதைவு

15. The Financial Fraud Risk Indicator (FRI) was recently launched by

A) RBI

B) NPCI

C) Finance Ministry

D) Department of Telecommunications

நிதி மோசடி இடர் குறிகாட்டி (FRI) ஆனது சமீபத்தில் எந்த நிறுவனத்தினால் தொடங்கப் பட்டது?

A) RBI

B) NPCI

C) நிதி அமைச்சகம்

D) தொலைத்தொடர்புத் துறை

16. South Asia's largest Battery Energy Storage System (BESS) of 20-MW capacity was recently inaugurated in which of the following city?

A) Gurugram

B) Ahmadabad

C) Pune

D) Delhi

20-மெகாவாட் திறன் கொண்ட தெற்காசியாவின் மிகப்பெரிய மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு (BESS) ஆனது சமீபத்தில் பின்வரும் எந்த நகரத்தில் திறக்கப்பட்டது?

A) குருகிராம்

B) அகமதாபாத்

C) புனே

D) டெல்லி

17. The PM CARES Fund was set up in

A) March 2019

B) May 2019

C) March 2020

D) May 2020

PM CARES நிதியம் எப்போது நிறுவப் பட்டது?

A) மார்ச் 2019

B) மே 2019

C) மார்ச் 2020

D) மே 2020

18. The “Matryoshka” AI strategy is adopted by

A) Microsoft

B) Google

C) Tesla

D) SpaceX

“Matryoshka” என்ற செயற்கை நுண்ணறிவு உத்தியை ஏற்றுள்ள நிறுவனம் எது?

A) மைக்ரோசாப்ட்

B) கூகுள்

C) டெஸ்லா

D) ஸ்பேஸ்எக்ஸ்

19. Who become a new member country of the BRICS’s New Development Bank?

A) Algeria

B) Morocco

C) Tunisia

D) Libya

BRICS அமைப்பின் புதிய மேம்பாட்டு வங்கியின் புதிய உறுப்பினராக இணைந்துள்ள நாடு எது?

A) அல்ஜீரியா

B) மொராக்கோ

C) துனிசியா

D) லிபியா

20. Choose the incorrect pairs

A) International Year of Glaciers' Preservation – 2025

B) International Year of the Woman Farmer – 2026

C) International Year of Sustainable and Resilient Tourism – 2027

D) International Year of Cooperatives – 2024

தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

A) சர்வதேசப் பனிப்பாறைகள் பாதுகாப்பு ஆண்டு – 2025

B) சர்வதேசப் பெண் விவசாயி ஆண்டு – 2026

C) சர்வதேச நிலையான மற்றும் நெகிழ்திறன் மிக்க சுற்றுலா ஆண்டு – 2027

D) சர்வதேசக் கூட்டுறவு ஆண்டு – 2024

21. The Globally Important Agricultural Heritage Systems (GIAHS) is announced by

A) International Fund for Agricultural Development

B) World Food Programme

C) Food and Agriculture Organization

D) Action Against Hunger

உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த வேளாண் பாரம்பரிய அமைப்புகள் (GIAHS) எந்த அமைப்பினால் அறிவிக்கப் படுகிறது?

A) சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதியம்

B) உலக உணவுத் திட்ட அமைப்பு

C) உணவு மற்றும் வேளாண் அமைப்பு

D) பட்டினி நிலைக்கு எதிரான நடவடிக்கை

22. Recently discovered Niallia Tiangongensis is a

A) Bacteria

B) Virus

C) Spider

D) Blind fish

சமீபத்தில் கண்டறியப்பட்ட நியாலியா டியாங்கோன்ஜென்சிஸ் என்பது என்ன?

A) பாக்டீரியா

B) வைரஸ்

C) சிலந்தி

D) பார்வைத் திறனற்ற மீன்

23. Choose the incorrect statement regarding the Commonwealth Day.

A) It is observed globally on May 24

B) Commonwealth is a voluntary association of 56 independent and sovereign members

C) India became a member of the Commonwealth in 1950

D) All the statements are correct

காமன்வெல்த் தினம் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இது உலகளவில் மே 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது

B) காமன்வெல்த் என்பது 56 சுயாதீன மற்றும் இறையாண்மை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தன்னார்வக் குழுவாகும்.

C) இந்தியா 1950 ஆம் ஆண்டில் காமன்வெல்த்தில் உறுப்பினரானது

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை

24. The new six-member Payments Regulatory Board was notified by

A) SEBI

B) RBI

C) NPCI

D) Department of Financial Services

ஆறு உறுப்பினர்களைக் கொண்ட புதியப் பண வழங்கீட்டு ஒழுங்குமுறை வாரியமானது எந்த அமைப்பினால் அறிவிக்கப் பட்டுள்ளது?

A) SEBI

B) RBI

C) NPCI

D) நிதிச் சேவைகள் துறை

25. Saroj Ghose is famously known for

A) Atomic Power Station

B) Gene Editing

C) Science Museums

D) Bio Fuel

சரோஜ் கோஸ் எதற்குப் பெயர் பெற்றவர் ஆவார்?

A) அணு மின் நிலையம்

B) மரபணு திருத்தம்

C) அறிவியல் அருங்காட்சியகங்கள்

D) உயிரி எரிபொருள்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ***D*** | 2. | ***B*** | 3. | ***A*** | 4. | ***B*** | 5. | ***C*** | 6. | ***B*** | 7. | ***C*** | 8. | ***D*** | 9. | ***C*** | 10. | ***B*** |
| 11. | ***C*** | 12. | ***A*** | 13. | ***B*** | 14. | ***C*** | 15. | ***D*** | 16. | ***D*** | 17. | ***C*** | 18. | ***B*** | 19. | ***A*** | 20. | ***D*** |
| 21. | ***C*** | 22. | ***A*** | 23. | ***A*** | 24. | ***B*** | 25. | ***C*** | | | | | | | | | | |

26. Choose the incorrect statement regarding the State Finance Commission

A) Tamil Nadu has constituted the Seventh State Finance Commission.

B) Retired IAS officer K. Allaudin was appointed as its chairperson

C) It will be covering five years, beginning on January 1, 2027

D) All the statements are correct

மாநில நிதி ஆணையம் தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) தமிழ்நாடு ஏழாவது மாநில நிதி ஆணையத்தினை அமைத்துள்ளது.

B) ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி K. அலாவுதீன் இதன் தலைவராக நியமிக்கப் பட்டார்

C) இது 2027 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் ஐந்து ஆண்டுகளுக்கு செயலில் இருக்கும்.

D) அனைத்து கூற்றுகளும் சரியானவை.

27. The National Florence Nightingale Awards is conferred to

A) Women Poets

B) Women scientists

C) Women teachers

D) Nurses

தேசிய ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகள் யாருக்கு வழங்கப் படுகின்றன?

A) பெண் கவிஞர்கள்

B) பெண் அறிவியலாளர்கள்

C) பெண் ஆசிரியர்கள்

D) செவிலியர்கள்

28. Invar anti-tank guided missile is used by

A) Iran

B) Ukraine

C) India

D) Russia

இன்வார் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் எறிகணை எந்த நாட்டினால் பயன்படுத்தப் படுகிறது?

A) ஈரான்

B) உக்ரைன்

C) இந்தியா

D) ரஷ்யா

29. India's first potash mine is located in

A) Uttar Pradesh

B) Jharkhand

C) Odisha

D) Rajasthan

இந்தியாவின் முதல் பொட்டாஷ் சுரங்கம் எங்கு அமைந்துள்ளது?

A) உத்தரப் பிரதேசம்

B) ஜார்க்கண்ட்

C) ஒடிசா

D) இராஜஸ்தான்

30. Choose the incorrect pair

A) Red Notice – Arrest of wanted persons

B) Black Notice – Missing persons

C) Blue Notice – Additional Information

D) Silver Notice – Trace Criminal Assets

தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்

| | | |
|---|---|---|
| A) சிகப்பு அறிக்கை | – | தேடப்படும் நபர்களைக் கைது செய்தல் |
| B) கருப்பு அறிக்கை | – | காணாமல் போன நபர்கள் |
| C) நீல அறிக்கை | – | கூடுதல் தகவல் |
| D) வெள்ளி அறிக்கை | – | குற்றவாளிகளின் சொத்துக்களைக் கண்காணித்தல் |

31. Chose the correct ascending order of FDI received states in FY 2024/25

A) Maharashtra> Karnataka> Delhi> Gujarat

B) Maharashtra> Tamil Nadu> Karnataka> Gujarat

C) Gujarat> Maharashtra> Tamil Nadu> Delhi

D) Maharashtra> Tamil Nadu> Gujarat> Delhi

2024/25 ஆம் நிதியாண்டில் FDI வரவின் அடிப்படையில் மாநிலங்களின் மிகச் சரியான ஏறு வரிசை யாது?

A) மகாராஷ்டிரா> கர்நாடகா> டெல்லி> குஜராத்

B) மகாராஷ்டிரா> தமிழ்நாடு> கர்நாடகா> குஜராத்

C) குஜராத் >மகாராஷ்டிரா> தமிழ்நாடு > டெல்லி

D) மகாராஷ்டிரா> தமிழ்நாடு> குஜராத் > டெல்லி

32. The Unified Payments Interface (UPI) was officially launched in

A) 2015

B) 2016

C) 2017

D) 2018

ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) ஆனது அதிகாரப் பூர்வமாக எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது?

A) 2015

B) 2016

C) 2017

D) 2018

33. Choose the incorrect pair of Laser Weapon

| | | |
|---|---|---|
| A) Israel | – | Magen |
| B) USA | – | Helios |
| C) Russia | – | Peresvet |
| D) China | – | DragonFire |

சீரொளிக் கற்றை சார்ந்த ஆயுதத்தின் தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இஸ்ரேல் – மேகன்

B) அமெரிக்கா – ஹீலியோஸ்

C) ரஷ்யா – பெரெஸ்வெட்

D) சீனா – டிராகன்ஃபயர்

34. The Joint Military Exercise Nomadic Elephant was held between

A) India – Mongolia

B) China – Mongolia

C) India – UAE

D) China – Sri Lanka

நொமாடிக் எலிபண்ட் என்ற கூட்டு இராணுவப் பயிற்சி எந்தெந்த நாடுகளுக்கிடையே நடத்தப் பட்டது?

A) இந்தியா – மங்கோலியா

B) சீனா – மங்கோலியா

C) இந்தியா – ஐக்கிய அரபு அமீரகம்

D) சீனா – இலங்கை

35. The 2026 Asian Weightlifting Championships will be held in

A) Chennai

B) Ahmedabad

C) Hyderabad

D) New Delhi

2026 ஆம் ஆண்டு ஆசிய பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டி எங்கு நடைபெற உள்ளது?

A) சென்னை

B) அகமதாபாத்

C) ஐதராபாத்

D) புது டெல்லி

36. The Tamil Nadu Online Gaming Regulation 2025 is aligned with

A) Article 21

B) Article 23

C) Article 38

D) Article 39

தமிழ்நாடு இயங்கலை வழி விளையாட்டுகள் ஒழுங்குமுறை விதிகள், 2025 ஆனது எந்த சரத்துடன் ஒத்திசைந்துள்ளது?

A) சரத்து 21

B) சரத்து 23

C) சரத்து 38

D) சரத்து 39

37. NAKSHA Capacity Building Program was conducted by

A) Ministry of Education

B) Ministry of Labour and Employment

C) Ministry of Rural Development

D) Ministry of Agriculture and Farmers' Welfare

NAKSHA திறன் மேம்பாட்டுத் திட்டம் எந்த அமைச்சகத்தினால் நடத்தப்பட்டது?

A) கல்வி அமைச்சகம்

B) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

C) கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகம்

D) வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சகம்

38. Which one of the following is not the qualification for the designation of Miniratna I status?

A) The age of the Company should not exceed 10 years

B) Must have achieved profitability in the last three consecutive years.

C) A pre-tax profit of Rs.30 crores or more in at least one of the three years.

D) Must maintain a positive net worth.

பின்வருவனவற்றில் எது மினிரத்னா I அந்தஸ்தைப் பெறுவதற்கான தகுதி அல்ல?

A) நிறுவனத்தின் காலம் ஆனது 10 ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்

B) கடந்த மூன்று ஆண்டுகளில் தொடர்ச்சியாக இலாபம் ஈட்டியிருக்க வேண்டும்.

C) அந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஓராண்டிலாவது 30 கோடி ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட வரிக்கு முந்தைய இலாபத்தினை ஈட்டியிருக்க வேண்டும்.

D) நேர்மறையான நிகர மதிப்பைப் பேண வேண்டும்.

39. Who are the top 3 remittance-receiving states as per the RBI's 6th Remittances Survey?

A) Maharashtra, Punjab, and Tamil Nadu

B) Maharashtra, Kerala, and Tamil Nadu

C) Maharashtra, Tamil Nadu and Karnataka

D) Maharashtra, Telangana and Karnataka

இந்திய ரிசர்வ் வங்கியின் 6வது பண வரவு கணக்கெடுப்பின்படி பணம் வரவில் முன்னணியில் உள்ள முதல் 3 மாநிலங்கள் யாவை?

A) மகாராஷ்டிரா, பஞ்சாப் மற்றும் தமிழ்நாடு

B) மகாராஷ்டிரா, கேரளா மற்றும் தமிழ்நாடு

C) மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா

D) மகாராஷ்டிரா, தெலுங்கானா மற்றும் கர்நாடகா

40. mNexspike Vaccine is related to

A) Malaria

B) Measles

C) Covid

D) Typhoid

mNexspike தடுப்பூசி எதனுடன் தொடர்புடையது?

A) மலேரியா

B) தட்டம்மை

C) கோவிட்

D) டைபாய்டு

41. The recently discovered Calotes Zolaiking is the

A) Spider

B) Butterfly

C) Lizard

D) Fish

சமீபத்தில் கண்டறியப்பட்ட கலோட்ஸ் சோலைக்கிங் என்பது யாது?

A) சிலந்தி

B) வண்ணத்துப்பூச்சி

C) பல்லி

D) மீன்

42. Who won the presidency of the International Institute of Administrative Sciences (IIAS) for the 2025-2028 term?

A) Pakistan

B) China

C) Malaysia

D) India

சர்வதேச நிர்வாக அறிவியல் நிறுவனத்தின் (IIAS) 2025-2028 ஆம் காலக் கட்டத்திற்கான தலைமைப் பதவியை வென்றுள்ள நாடு எது?

A) பாகிஸ்தான்

B) சீனா

C) மலேசியா

D) இந்தியா

43. Which country has unveiled its plan to construct the world's first hybrid fusion-fission nuclear plant - "spark"?

A) North Korea

B) South Korea

C) China

D) USA

"spark" எனப்படும் அணுக்கரு இணைவு-பிளவு சார் கலப்பு வகையிலான உலகின் முதல் அணுமின் நிலையத்தைக் கட்டமைக்கும் திட்டத்தினை எந்த நாடு வெளியிட்டுள்ளது?

A) வட கொரியா

B) தென் கொரியா

C) சீனா

D) அமெரிக்கா

44. Which article allows the Supreme Court to provide punishment for contempt of itself?

A) Article 126

B) Article 129

C) Article 131 (A)

D) Article 133 (A)

உச்ச நீதிமன்றமானது அதனை அவமதித்ததற்காக தண்டனை வழங்குவதற்கு எந்தச் சரத்து அதனை அனுமதிக்கிறது?

A) சரத்து 126

B) சரத்து 129

C) சரத்து 131 (A)

D) சரத்து 133 (A)

45. DHRUVA policy was released by

A) Department of Defence

B) Department of Biotechnology

C) Department of Posts

D) Department of Economic Affairs

DHRUVA என்ற கொள்கை எந்தத் துறையினால் வெளியிடப்பட்டது?

A) பாதுகாப்புத் துறை

B) உயிரித் தொழில்நுட்பத் துறை

C) அஞ்சல் துறை

D) பொருளாதார விவகாரங்கள் துறை

46. The beneficiaries of the C CARES App are

A) Children

B) Coal workers

C) Small industries

D) Senior citizens

C CARES செயலியின் பயனாளிகள் யார்?

A) குழந்தைகள்

B) நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள்

C) சிறு தொழில்கள்

D) முதியோர்

47. The 2025 G7 Summit will be hosted by

A) Canada

B) USA

C) France

D) Uk

2025 ஆம் ஆண்டு G7 உச்சி மாநாடானது எந்த நாட்டினால் நடத்தப்பட உள்ளது?

A) கனடா

B) அமெரிக்கா

C) பிரான்ஸ்

D) ஐக்கியப் பேரரசு

48. The Kulsi River is tributary of

A) R. Manas

B) R. Barak

C) R. Lohit

D) R. Brahmaputra

குல்சி நதி எதனுடைய துணை நதியாகும்?

A) மனாஸ் நதி

B) பராக் நதி

C) லோஹித் நதி

D) பிரம்மபுத்திரா நதி

49. Who has been named the new chairperson of the Economic Advisory Council to the PM?

A) Rajiv Gauba

B) Ramesh Chand

C) S. Mahendra Dev

D) B.V.R. Subrahmanyam

பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் புதிய தலைவராக யார் நியமிக்கப் பட்டுள்ளார்?

A) இராஜீவ் கௌபா

B) இரமேஷ் சந்த்

C) S. மகேந்திர தேவ்

D) B.V.R. சுப்பிரமணியம்

50. The book 'A Walk Up the Hill: Living with People and Nature' was authored by

A) Kasturirangan

B) Madhav Gadgil

C) Sanjay Kumar

D) T.S.R. Subramanian

'A Walk Up the Hill: Living with People and Nature' என்றப் புத்தகத்தினை எழுதியவர் யார்?

A) கஸ்தூரி ரங்கன்

B) மாதவ் காட்கில்

C) சஞ்சய் குமார்

D) T.S.R. சுப்பிரமணியன்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26. | ***C*** | 27. | ***D*** | 28. | ***C*** | 29. | ***D*** | 30. | ***B*** | 31. | ***A*** | 32. | ***B*** | 33. | ***D*** | 34. | ***A*** | 35. | ***B*** |
| 36. | ***D*** | 37. | ***C*** | 38. | ***A*** | 39. | ***B*** | 40. | ***C*** | 41. | ***C*** | 42. | ***D*** | 43. | ***C*** | 44. | ***B*** | 45. | ***C*** |
| 46. | ***B*** | 47. | ***A*** | 48. | ***D*** | 49. | ***C*** | 50. | ***B*** | | | | | | | | | | |

---

51. Choose the incorrect statement regarding Milk Production in India

A) India has been the number one milk producer since 1998.

B) India produces 25 percent of the world's milk

C) India holds the title of the world's largest livestock owner

D) All the statements are correct

இந்தியாவில் பால் உற்பத்தி தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) 1998 ஆம் ஆண்டு முதல் இந்தியா பால் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.

B) உலகின் பால் உற்பத்தியில் இந்தியா 25 சதவீதத்தினை உற்பத்தி செய்கிறது.

C) உலகின் மிகப்பெரிய கால்நடை உரிமையாளர் என்ற பட்டத்தினை இந்தியா கொண்டு உள்ளது.

D) அனைத்து கூற்றுகளும் சரியானவை

52. HawkEye 360 technology is related to

A) Dark Matters

B) Dark Energy

C) Dark Ships

D) Dark Pattern

HawkEye 360 என்ற தொழில்நுட்பம் எதனுடன் தொடர்புடையது?

A) கரும்பொருள்

B) இருண்ட ஆற்றல்

C) மறைவு நிலையில் உள்ள கப்பல்

D) நெறிமுறை சாரா கருத்துத் திணிப்பு நடைமுறை

53. Choose the incorrect pair

| | | |
|---|---|---|
| A) Aide-de-Camp (ADC) to the Governor | – | Manisha |
| B) Aide-de-Camp (ADC) to the President | – | Yashasvi |
| C) Chief of the Economic Advisory Council to PM | – | Mahendra Dev |
| D) IRDA Chairman | – | Anuradha Thakur |

தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| A) ஆளுநருக்கான மெய்க் காப்பாளர் (ADC) | – | மனிஷா |
| B) குடியரசுத் தலைவருக்கான மெய்க்காப்பாளர் (ADC) | – | யஷஸ்வி |
| C) பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் தலைவர் | – | மகேந்திர தேவ் |
| D) IRDA தலைவர் | – | அனுராதா தாக்கூர் |

54. Socotra Island is located in

A) Atlantic Ocean

B) Indian Ocean

C) Pacific Ocean

D) Arctic Ocean

சோகோத்ரா தீவு எங்கு அமைந்துள்ளது?

A) அட்லாண்டிக் பெருங்கடல்

B) இந்தியப் பெருங்கடல்

C) பசிபிக் பெருங்கடல்

D) ஆர்க்டிக் பெருங்கடல்

55. Which country will chair the Al-Qaida Sanctions Committee of the UNSC?

A) Denmark

B) Pakistan

C) Russia

D) India

UNSC சபையின் அல்-கொய்தா தடைகள் குழுவிற்குத் தலைமை ஏற்க உள்ள நாடு எது?

A) டென்மார்க்

B) பாகிஸ்தான்

C) ரஷ்யா

D) இந்தியா

56. Which mineral is termed as natural geological clock on Mars?

A) Natrojarosite

B) Plumbojarosite

C) Ammoniojarosite

D) Jarosite

செவ்வாய்க் கிரகத்தில் இயற்கையான பூகோளவியல் கடிகாரம் என்று அழைக்கப்படும் கனிமம் எது?

A) நட்ரோஜரோசைட்

B) பிளம்போஜரோசைட்

C) அம்மோனியோஜரோசைட்

D) ஜரோசைட்

57. Choose the correct pair with respect to 2025 French Open Tennis winners

A) Women's Doubles winner – Jasmine Paolini

B) Men's singles winner – Marcel Granollers

C) Women's singles winner – Sara Errani

D) Men's doubles winner – Carlos Alcaraz

2025 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் வெற்றியாளர்கள் குறித்த சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

A) மகளிர் இரட்டையர் பிரிவு வெற்றியாளர் – ஜாஸ்மின் பயோலினி

B) ஆடவர் ஒற்றையர் பிரிவு வெற்றியாளர் – மார்செல் கிரானோலர்ஸ்

C) மகளிர் ஒற்றையர் பிரிவு வெற்றியாளர் – சாரா எர்ரானி

D) ஆடவர் இரட்டையர் பிரிவு வெற்றியாளர் – கார்லோஸ் அல்கராஸ்

58. Kalaignar M. Karunanidhi Classical Tamil Award 2025 was given to

A) Muthu Vavasi

B) P.R. Subramanian

C) Rajendran Sankaravelayuthan

D) Thayammal Aravanan

கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருது 2025 யாருக்கு வழங்கப்பட்டது?

A) முத்து வவாசி

B) P.R. சுப்பிரமணியன்

C) இராஜேந்திரன் சங்கரவேலாயுதன்

D) தாயம்மாள் அறவாணன்

59. The world's highest rail bridge in Jammu & Kashmir was inaugurated over

A) Jhelum River

B) Chenab River

C) Sutluj River

D) Ravi River

ஜம்மு & காஷ்மீரில் உலகின் மிக உயரமான இரயில் பாலம் எந்த நதி மீது திறக்கப் பட்டு உள்ளது?

A) ஜீலம் நதி

B) செனாப் நதி

C) சட்லஜ் நதி

D) ராவி நதி

60. Choose the incorrect statement regarding ECOWAS

A) The Treaty of Lagos was signed in 1975.

B) Currently it has 12 member countries

C) Recently, Niger, Mali, and Burkina Faso have joined into this group

D) All the statements are correct

ECOWAS தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்க.

A) லாகோஸ் ஒப்பந்தம் 1975 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.

B) தற்போது இது 12 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது.

C) சமீபத்தில், நைஜர், மாலி மற்றும் புர்கினா பாசோ ஆகிய நாடுகள் இந்தக் குழுவில் இணைந்துள்ளன.

D) அனைத்தும் கூற்றுகளும் சரியானவை

61. Who unveiled a $10 billion 5-year initiative to transform urban infrastructure across India?

A) Asian Development Bank

B) World Bank

C) New Development Bank

D) European Bank for Reconstruction and Development

இந்தியா முழுவதும் நகர்ப்புற உள்கட்டமைப்பினை மாற்றுவதற்கான 5 ஆண்டு கால 10 பில்லியன் டாலர் முன்னெடுப்பினை எந்த அமைப்பு அறிமுகப்படுத்தியது?

A) ஆசிய மேம்பாட்டு வங்கி

B) உலக வங்கி

C) புதிய மேம்பாட்டு வங்கி

D) ஐரோப்பியப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி

62. Khichan and Menar, newly designated as Ramsar sites, are located in which state?

A) Uttar Pradesh

B) Rajasthan

C) Gujarat

D) Maharashtra

ராம்சர் தளங்களாக புதிதாக நியமிக்கப்பட்ட கிச்சான் மற்றும் மேனார் ஆகியவை எந்த மாநிலத்தில் அமைந்துள்ளன?

A) உத்தரப் பிரதேசம்

B) இராஜஸ்தான்

C) குஜராத்

D) மகாராஷ்டிரா

63. Tral Wildlife Sanctuary is a protected area located in

A) Haryana

B) Ladakh

C) Jammu and Kashmir

D) Uttarakhand

டிரால் வனவிலங்கு சரணாலயம் என்ற பாதுகாக்கப்பட்டப் பகுதி எங்கு அமைந்துள்ளது?

A) ஹரியானா

B) லடாக்

C) ஜம்மு மற்றும் காஷ்மீர்

D) உத்தரகாண்ட்

64. Who became the world's leading creditor nation in 2024?

A) Japan

B) Germany

C) China

D) USA

2024 ஆம் ஆண்டில் உலகின் முன்னணி கடன் வழங்கீட்டு நாடாக மாறியது எது?

A) ஜப்பான்

B) ஜெர்மனி

C) சீனா

D) அமெரிக்கா

65. Shangri-la Dialogue 2025 is related to

A) Defence

B) Free trade

C) Biodiversity

D) Global Warming

ஷாங்க்ரி-லா 2025 பேச்சுவார்த்தை என்பது எதனுடன் தொடர்புடையது?

A) பாதுகாப்பு

B) தடையற்ற வர்த்தகம்

C) பல்லுயிர்ப் பெருக்கம்

D) புவி வெப்பமடைதல்

66. The world's largest elephant population is held by

A) Zimbabwe

B) Tanzania

C) Kenya

D) Botswana

உலகின் மிக அதிக யானை எண்ணிக்கையைக் கொண்டுள்ள நாடு எது?

A) ஜிம்பாப்வே

B) தான்சானியா

C) கென்யா

D) போட்ஸ்வானா

67. India’s first integrated E-Waste Eco Park is going to be set up at

A) Rajasthan

B) Gujarat

C) New Delhi

D) Maharastra

இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த மின்னணுக் கழிவுகள் சுற்றுச்சூழல் பூங்கா எங்கு அமைக்கப் பட உள்ளது?

A) இராஜஸ்தான்

B) குஜராத்

C) புது டெல்லி

D) மகாராஷ்டிரா

68. Which year has been declared as the International Year of the Woman Farmer?

A) 2026

B) 2027

C) 2028

D) 2029

சர்வதேசப் பெண் விவசாயிகள் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ள ஆண்டு எது?

A) 2026

B) 2027

C) 2028

D) 2029

69. Amlesh Kumar vs State of Bihar case is related to

A) Right to shelter

B) Preventive detention

C) Narcoanalysis test

D) Mercy Petition

அம்லேஷ் குமார் எதிர் பீகார் மாநில அரசு இடையிலான வழக்கு எதனுடன் தொடர்பு உடையது?

A) தங்குமிட உரிமை

B) தடுப்புக் காவல்

C) உண்மை கண்டறியும் சோதனை

D) கருணை மனு

70. World Energy Investment Report 2025 was released by

A) International Renewable Energy Agency

B) International Energy Agency

C) World Energy Council

D) Organization of the Petroleum Exporting Countries

உலக எரிசக்தி முதலீட்டு அறிக்கை 2025 எந்த அமைப்பினால் வெளியிடப்பட்டது?

A) சர்வதேசப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை

B) சர்வதேச எரிசக்தி முகமை

C) உலக எரிசக்தி சபை

D) பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு

71. Choose the correct statement regarding Birsa Munda

A) Birsa Munda is known as 'Dharti Aaba' or the 'Father of the Earth'

B) His death anniversary known as 'Janjatiya Gaurav Divas'

C) His birth anniversary is observed as Balidan Diwas'

D) All the statements are correct

பிர்சா முண்டா தொடர்பான சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்க.

A) பிர்சா முண்டா 'தார்த்தி ஆபா' அல்லது 'பூமியின் தந்தை' என்று அழைக்கப் படுகிறார்

B) அவரின் நினைவு தினமானது 'ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ்' என்று அழைக்கப்படுகிறது

C) அவரது பிறந்த நாள் ஆனது பாலிதான் திவாஸ் ஆக அனுசரிக்கப்படுகிறது

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை

72. Review of the state of world marine fishery resources - 2025 report was released by

A) UN-Oceans

B) Global Fisheries Innovation

C) International Seabed Authority

D) Food and Agriculture Organization

2025 ஆம் ஆண்டு உலக கடல்சார் மீன் வளங்களின் நிலை குறித்த மதிப்பாய்வு அறிக்கை என்பது எந்த அமைப்பினால் வெளியிடப்பட்டது?

A) ஐ.நா.பெருங்கடல்கள் அமைப்பு

B) உலகளாவிய மீன்வளக் கண்டுபிடிப்பு

C) சர்வதேசக் கடல்படுகை ஆணையம்

D) உணவு மற்றும் வேளாண் அமைப்பு

73. UMEED Central Portal is related to

A) Unclaimed deposits

B) Unclaimed shares

C) Waqf properties

D) Enemy Properties

UMEED மத்திய இணைய தளம் எதனுடன் தொடர்புடையது?

A) உரிமை கோரப்படாத வைப்புத் தொகைகள்

B) உரிமை கோரப்படாதப் பங்குகள்

C) வக்ஃப் சொத்துக்கள்

D) எதிரி நாட்டினரின் சொத்துக்கள்

74. Which country assume the chairmanship of the 12th BRICS Parliamentary Forum 2026?

A) Brazil

B) Russia

C) China

D) India

12வது பிரிக்ஸ் பாராளுமன்ற மன்றத்தின் 2026 ஆம் ஆண்டிற்கான தலைமைப் பொறுப்பை ஏற்க உள்ள நாடு எது?

A) பிரேசில்

B) ரஷ்யா

C) சீனா

D) இந்தியா

75. Who won the Norway Chess title 2025?

A) Magnus Carlsen

B) Fabiano Caruana

C) D Gukesh

D) Arjun Erigaisi

2025 ஆம் ஆண்டு நார்வே சதுரங்கப் போட்டியில் பட்டம் வென்றவர் யார்?

A) மேக்னஸ் கார்ல்சன்

B) ஃபேபியானோ கருவானா

C) D. குகேஷ்

D) அர்ஜுன் எரிகைசி

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51. | ***D*** | 52. | ***C*** | 53. | ***D*** | 54. | ***B*** | 55. | ***A*** | 56. | ***D*** | 57. | ***A*** | 58. | ***D*** | 59. | ***B*** | 60. | ***C*** |
| 61. | ***A*** | 62. | ***B*** | 63. | ***C*** | 64. | ***B*** | 65. | ***A*** | 66. | ***D*** | 67. | ***C*** | 68. | ***A*** | 69. | ***C*** | 70. | ***B*** |
| 71. | ***A*** | 72. | ***D*** | 73. | ***C*** | 74. | ***D*** | 75. | ***A*** | | | | | | | | | | |

---

76. Where was NATO's BALTOPS 25 military exercise held?

A) Estonia

B) Poland

C) Lithuania

D) Latvia

நேட்டோ நாடுகளின் BALTOPS 25 இராணுவப் பயிற்சியானது எங்கு நடத்தப்பட்டது?

A) எஸ்டோனியா

B) போலந்து

C) லிதுவேனியா

D) லாட்வியா

77. What is India's rank in the WEF Energy Transition Index 2025?

A) 51

B) 63

C) 71

D) 79

உலகப் பொருளாதார மன்றத்தின் 2025 ஆம் ஆண்டு எரிசக்தி மாற்றக் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை யாது?

A) 51

B) 63

C) 71

D) 79

78. In the 'Performance Grade Index (PGI) 2.0', which state scored the lowest in India?

A) Meghalaya

B) Mizoram

C) Nagaland

D) Arunachal Pradesh

'செயல்திறன் தரக் குறியீடு (PGI) 2.0' குறியீட்டில், இந்தியாவில் மிகக் குறைந்த மதிப்பெண் பெற்ற மாநிலம் எது?

A) மேகாலயா

B) மிசோரம்

C) நாகாலாந்து

D) அருணாச்சலப் பிரதேசம்

79. When will India's 16th Census with caste data start?

A) October 1, 2026

B) March 1, 2027

C) April 1, 2026

D) February 1, 2027

சாதித் தரவுகளுடன் கூடிய இந்தியாவின் 16வது மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது தொடங்கப்பட உள்ளது?

A) அக்டோபர் 01, 2026

B) மார்ச் 01, 2027

C) ஏப்ரல் 01, 2026

D) பிப்ரவரி 01, 2027

80. Where was the 3rd United Nations Ocean Conference (UNOC3) held?

A) Lisbon, Portugal

B) Rome, Italy

C) Nice, France

D) Geneva, Switzerland

3வது ஐக்கிய நாடுகளின் பெருங்கடல் மாநாடு (UNOC3) எங்கு நடத்தப்பட்டது?

A) லிஸ்பன், போர்ச்சுகல்

B) ரோம், இத்தாலி

C) நைஸ், பிரான்ஸ்

D) ஜெனீவா, சுவிட்சர்லாந்து

81. Shipki La Pass is located in which Indian state?

A) Uttarakhand

B) Sikkim

C) Arunachal Pradesh

D) Himachal Pradesh

ஷிப்கி லா கணவாய் இந்தியாவின் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A) உத்தரகாண்ட்

B) சிக்கிம்

C) அருணாச்சலப் பிரதேசம்

D) இமாச்சலப் பிரதேசம்

82. Choose the incorrect statement regarding Crocodile Conservation Programme,

A) India began its Crocodile Conservation programme in 1975.

B) India launched this project at Odisha's Bhitarkanika National Park

C) India hosts nearly 80% of the global wild gharial population.

D) All the statements are correct

முதலைகளின் வளங்காப்பு திட்டம் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இந்தியா தனது முதலைகள் வளங்காப்புத் திட்டத்தினை 1975 ஆம் ஆண்டில் தொடங்கியது.

B) இந்தியா இந்தத் திட்டத்தினை ஒடிசாவின் பிதர்கனிகா தேசியப் பூங்காவில் தொடங்கியது

C) உலக நன்னீர் வாழ் முதலைகளின் எண்ணிக்கையில் சுமார் 80% இந்தியாவில் உள்ளன.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை

83. International MSME day is celebrated on

A) June 20

B) June 27

C) June 24

D) June 25

சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் தினம் எப்போது கொண்டாடப் படுகிறது?

A) ஜூன் 20

B) ஜூன் 27

C) ஜூன் 24

D) ஜூன் 25

84. Where were 24-million-year-old fossilized leaves found in India?

A) Damodar Valley

B) Jharia Coalfield, Jharkhand

C) Makum Coalfield, Assam

D) Singrauli Coalfield, Madhya Pradesh

24 மில்லியன் ஆண்டுகள் பழமையான புதைபடிவமான இலைகள் இந்தியாவில் எங்கே கண்டறியப்பட்டன?

A) தாமோதர் பள்ளத்தாக்கு

B) ஜாரியா நிலக்கரி சுரங்கப் பகுதி, ஜார்க்கண்ட்

C) மகம் நிலக்கரி சுரங்கப் பகுதி, அசாம்

D) சிங்ரௌலி நிலக்கரி சுரங்கப் பகுதி, மத்தியப் பிரதேசம்

85. What is NAKSHATRA?

A) A new vaccine for viral diseases

B) A diagnostic kit for COVID -19

C) A training program for virologists

D) A very high-performance computing facility

NAKSHATRA என்றால் என்ன?

A) வைரஸ் நோய்களுக்கான புதிய தடுப்பூசி

B) COVID - 19 தொற்றுக்கான நோயறிதல் கருவி

C) நச்சுயிரியல் வல்லுநர்களுக்கான பயிற்சித் திட்டம்

D) மிக உயர்ந்த செயல்திறன் கொண்ட கணினி வசதி

86. Choose the correct pair with respect to the 2025 Paris Diamond League Javelin Throw.

A) Neeraj Chopra – Winner

B) Julian Weber – Winner

C) Jakub Vadlejch – Runner-up

D) Anderson Peters – Winner

2025 ஆம் ஆண்டு பாரீஸ் டைமண்ட் லீக் ஈட்டி எறிதல் போட்டி தொடர்பான சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்:

A) நீரஜ் சோப்ரா – வெற்றியாளர்

B) ஜூலியன் வெபர் – வெற்றியாளர்

C) ஜாகப் வாட்லெஜ்ச் – இரண்டாம் இடம்

D) ஆண்டர்சன் பீட்டர்ஸ் – வெற்றியாளர்

87. Who won the Digital Payments Award 2024–25 from the Department of Financial Services?

A) State Bank of India

B) NPCI

C) India Post Payments Bank

D) HDFC

நிதிச் சேவைகள் துறையில் 2024–25 ஆம் ஆண்டு எண்ணிமப் பண வழங்கீட்டுச் சேவைகள் விருதை வென்ற வங்கி எது?

A) பாரத் ஸ்டேட் வங்கி

B) இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகம்

C) இந்திய அஞ்சலகப் பண வழங்கீட்டு வங்கி

D) HDFC

88. Which animation film won the Jury Award at the Annecy International Animation Festival 2025?

A) Desi Oon

B) Bombay Rose

C) Toonpur Ka Superhero

D) The Jungle Book

2025 ஆம் ஆண்டு அன்னேசி சர்வதேச இயங்குபட விழாவில் தேர்வு மன்ற விருதை வென்ற இயங்குபடம் சார் திரைப்படம் எது?

A) Desi Oon

B) Bombay Rose

C) Toonpur Ka Superhero

D) The Jungle Book

89. Where were India's first hydrogen fuel cell buses launched by NTPC?

A) Gandhinagar, Gujarat

B) Tawang, Arunachal Pradesh

C) Leh, Ladakh

D) Gangtok, Sikkim

தேசிய அனல் மின் கழகத்தினால் இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் பேருந்துகளானது எங்கு அறிமுகப் படுத்தப் பட்டு உள்ளன?

A) காந்திநகர், குஜராத்

B) தவாங், அருணாச்சலப் பிரதேசம்

C) லே, லடாக்

D) காங்டாக், சிக்கிம்

90. Choose the incorrect statement regarding the Madras High Court

A) It was established on June 26, 1862, and is about to complete 163 years.

B) It has appellate jurisdiction over Tamil Nadu and Puducherry.

C) It is one of the oldest high courts in India, along with Calcutta and Bombay High Courts.

D) It is the largest judicial Complex structure in the world.

சென்னை உயர்நீதிமன்றம் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்:

A) 1862 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட இது அதன் 163 ஆண்டுகளை நிறைவு செய்ய உள்ளது.

B) இது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மீதான மேல்முறையீட்டு அதிகார வரம்பைக் கொண்டுள்ளது.

C) இது கொல்கத்தா மற்றும் மும்பை உயர் நீதிமன்றங்களுடன் இந்தியாவின் பழமையான உயர் நீதிமன்றங்களில் ஒன்றாகும்.

D) இது உலகின் மிகப்பெரிய நீதித்துறை வளாக அமைப்பாகும்.

91. What was the theme of the 11th International Yoga Day on June 21?

A) Yoga for Mental Wellness

B) Yoga: Harmony and Peace

C) Yoga for One Earth, One Health

D) Yoga for All Ages

ஜூன் 21 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்ட 11வது சர்வதேச யோகா தினத்தின் கருத்துரு யாது?

A) Yoga for Mental Wellness

B) Yoga: Harmony and Peace

C) Yoga for One Earth, One Health

D) Yoga for All Ages

92. Choose the incorrect statement regarding the earliest Indian mention of Halley's Comet.

A) It was found in the Srisailam Copper Plate in Andhra Pradesh.

B) The inscription was written in Sanskrit and Nagari script.

C) It belongs to the reign of Vijayanagara king Mallikarjuna.

D) All the statements are correct.

ஹாலியின் வால் நட்சத்திரம் பற்றிய முற்கால இந்தியக் குறிப்பு தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்:

A) இது ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீசைலம் செப்புத் தகட்டில் கண்டறியப்பட்டது.

B) அந்தக் கல்வெட்டு ஆனது சமஸ்கிருதம் மற்றும் நாகரி எழுத்து வடிவங்களில் எழுதப்பட்டது.

C) இது விஜயநகர மன்னர் மல்லிகார்ஜுனரின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தது.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

93. Who is the first person from Tamil Nadu to climb the highest peaks on all seven continents?

A) N. Muthamizh Selvi

B) R. Meena

C) S. Kavya Iyengar

D) A. Anjali

ஏழு கண்டங்களிலும் உள்ள மிக உயர்ந்த சிகரங்களை ஏறிய முதல் தமிழக நபர் யார்?

A) N. முத்தமிழ் செல்வி

B) R. மீனா

C) S. காவ்யா ஐயங்கார்

D) A. அஞ்சலி

94. Who is Tamil Nadu's first transgender woman Assistant Professor at Loyola College, Chennai?

A) P. Divya

B) L. Revathi

C) N. Jency

D) M. Anitha

சென்னை லயோலா கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பொறுப்பேற்ற தமிழ்நாட்டின் முதல் திருநர் சமுதாயப் பெண் யார்?

A) P. திவ்யா

B) L. ரேவதி

C) N. ஜென்சி

D) M. அனிதா

95. Which book by Vishnu Puram Saravanan won the Bal Sahitya Puraskar 2025 in the Tamil language category?

A) Koothondru Kooditru

B) Otrai Siragu Oviya

C) Nilavum Nilaavum

D) Kadalin Kural

விஷ்ணு புரம் சரவணன் எழுதிய எந்தப் புத்தகம் ஆனது தமிழ் மொழிப் பிரிவில் 2025 ஆம் ஆண்டு பால சாகித்ய புரஸ்கார் விருதை வென்றது?

A) கூத்தொன்று கூடிற்று

B) ஒற்றை சிறகு ஓவியா

C) நிலவும் நிலாவும்

D) கடலின் குரல்

96. Choose the incorrect statement regarding the Ottawa Treaty:

A) Finland became the 5th European nation to exit the Ottawa landmine treaty.

B) Finland joined the Ottawa Treaty in 2012.

C) The Ottawa Treaty was signed in 1999.

D) The treaty bans the use, stockpiling, production, and transfer of antipersonnel mines.

ஒட்டாவா ஒப்பந்தம் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்:

A) ஒட்டாவா கண்ணிவெடி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறிய 5வது ஐரோப்பிய நாடாக பின்லாந்து மாறியது.

B) பின்லாந்து 2012 ஆம் ஆண்டில் ஒட்டாவா ஒப்பந்தத்தில் இணைந்தது.

C) ஒட்டாவா ஒப்பந்தம் 1999 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.

D) இந்த ஒப்பந்தம் ஆனது மனிதர்களுக்கு எதிராக கண்ணிவெடிகளைப் பயன்படுத்துதல், சேமித்து வைத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் இடம் மாற்றுவதைத் தடை செய்கிறது.

97. Who has soft-launched Quantum 5G Fixed Wireless Access (FWA) in Hyderabad?

A) BSNL

B) Jio

C) Airtel

D) Vodafone Idea

ஐதராபாத்தில் குவாண்டம் 5G என்ற நிலையான கம்பிவடம் சாராத அணுகலை (FWA) பெருமளவு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

A) BSNL

B) Jio

C) Airtel

D) Vodafone Idea

98. Where was the recent National Conference of Estimates Committees held?

A) New Delhi

B) Kolkata

C) Mumbai

D) Bengaluru

சமீபத்தில் தேசிய மதிப்பீட்டுக் குழுக்களின் மாநாடு எங்கு நடைபெற்றது?

A) புது தில்லி

B) கொல்கத்தா

C) மும்பை

D) பெங்களூரு

99. Which organization launched the centralized digital platform called Pratibha Setu?

A) Staff Selection Commission (SSC)

B) Union Public Service Commission (UPSC)

C) National Testing Agency (NTA)

D) Ministry of Education

பிரதிபா சேது என்ற மையப்படுத்தப்பட்ட எண்ணிமத் தளத்தை எந்த அமைப்பு அறிமுகப்படுத்தியது?

A) பணியாளர் தேர்வு ஆணையம் (SSC)

B) ஒன்றியக் குடிமைப் பணியாளர் ஆணையம் (UPSC)

C) தேசியத் தேர்வு முகமை (NTA)

D) கல்வி அமைச்சகம்

100. Which asset is now the second-largest in the world's foreign exchange reserves?

A) Dollar

B) Euro

C) Gold

D) Yen

உலகின் அந்நியச் செலாவணி இருப்பில் தற்போது இரண்டாவது பெரிய பங்கினைக் கொண்டுள்ளது எது?

A) டாலர்

B) யூரோ

C) தங்கம்

D) யென்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 76. | ***D*** | 77. | ***C*** | 78. | ***A*** | 79. | ***B*** | 80. | ***C*** | 81. | ***D*** | 82. | ***D*** | 83. | ***B*** | 84. | ***C*** | 85. | ***D*** |
| 86. | ***A*** | 87. | ***C*** | 88. | ***A*** | 89. | ***C*** | 90. | ***D*** | 91. | ***C*** | 92. | ***D*** | 93. | ***A*** | 94. | ***C*** | 95. | ***B*** |
| 96. | ***C*** | 97. | ***A*** | 98. | ***C*** | 99. | ***B*** | 100. | ***C*** | | | | | | | | | | |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★